EQUIFAX

sidbi

# மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ்

தொகுதி IX – ஜூலை 2021



# பகுப்பாய்வு தொடர்புகள்


**ஈக்விஃபாக்ஸ்**
கிரண் சமுத்ராலா
துணைத் தலைவர் –
பகுப்பாய்வு
kiran.samudrala@equifax.com

ஸ்ருதி ஜோஷி
உதவி துணைத்தலைவர்–
பகுப்பாய்வு
shruti.joshi@equifax.com

வந்தனா பாஞ்சால்
மூத்த நிர்வாகி. –
பகுப்பாய்வு
vandana.panchal@equifax.com

**சிட்பி**
கைலாஷ் சந்தர் பானு
தலைமை பொது மேலாளர் –
சி.எஸ் & ஆர்.வி – ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

ரங்கதாஸ் பிரபாவதி
துணை பொது மேலாளர்
சி.எஸ் & ஆர்.வி – ஈ.ஆர்.டி.ஏ
erdav@sidbi.in

ரமேஷ் குமார்
உதவி மேலாளர்
சி.எஸ் & ஆர்.வி – ஈ.ஆர்.டி.ஏ
rameshk@sidbi.in

# உள்ளடக்கம்


› நிர்வாகச் சுருக்கம் 04

› சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம் 05

› குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம் 06

› விநியோக போக்குகள் 09

› தொழில்துறை இடர் தோற்றவிவரம் 12

› புவியியல் வெளிப்பாடு 14

› விரிவான மாநில தோற்றம்: கர்நாடகா 17

› லட்சிய மாவட்டங்கள் 22

› கோவிட் -19 & புவியியல் போக்குகள் 24

# நிர்வாகச் சுருக்கம்

*கோவிட் -19, குறுந்தொழில் துறையினை, குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட தொழில்களின் வினியோக சங்கிலி மற்றும் வணிக நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படுவதால், கடுமையாக பாதித்துள்ளது. மைக்ரோஃபினான்ஸ் பல்ஸின் 9 வது பதிப்பு, மார்ச் 31, 2021 நிலவரப்படி தரவு (data) சமர்ப்பிப்பை அடிப்படையாகக் கொண்டது. குறுந்தொழில் துறையின் போக்குகள் மற்றும் முன்னேற்றத்தை உள்ளடக்கியது.*

*31 மார்ச் 2021 இல் குறுந்தொழில் துறையின் ஏட்டுப்பெறுமதி (book size) ரூ.249,277 கோடி, இதில் வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவன்ங்கள்-குறுந்தொழில் நிதி நிறுவனங்கள்(NBFC-MFI) 75% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றன. குறுந்தொழில் துறை ஆண்டுக்கு ஆண்டு 18% அதிகரித்த போர்ட்ஃபோலியோவுடன் அதன் எதிர்திறனுடன் மீண்டு கோவிட்-க்கு முந்தைய நிலைக்குத் திரும்பியது. கடன் வழங்குபவர்களிடையே, சந்தைப் பங்கின் தொடர்ச்சியான அதிகரிப்புடன் வங்கிகள் ஆண்டுக்கு ஆண்டு 36% அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.*

*குறுந்தொழில் நிதித்துறை ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச் (JFM) '21 இல் ரூ.93,100 கோடி மதிப்புள்ள கடன்களை வழங்கியது . தொகுதி அடிப்படையில் கடன் வழங்கல் ஆண்டுக்கு ஆண்டு 17% மற்றும் JFM '20 முதல் JFM' 21 வரை மதிப்பு அடிப்படையில் 26% வளர்ச்சியைக் கண்டது. அனைத்து காலாண்டுகளிலும் வங்கிகள் அதிக பங்களிப்பை வழங்கின. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் அகில இந்திய சராசரி கடன் அளவு ஆனது அக்டோபர், நவம்பர், டிசம்பர் (OND) '20 முதல் JFM' 21 வரை 19% அதிகரித்துள்ளது.*

*தொழில்துறையின் வசூல் திறன் முன்னேற்றத்தைக் கண்டதால், செயலில் உள்ள கடன் தவணை தவறுதல்கள் டிசம்பர் 2020 உடன் ஒப்பிடும்போது மார்ச் 2021 இல் முன்னேற்றம் காட்டுகின்றன.*

*மேற்கு வங்காளத்தின் மிக உயர்ந்த நிலுவையில் உள்ள கடன்கள் (POS) ஆண்டுக்கு ஆண்டு 25% வளர்ச்சியுடன், தொழில்துறையின் வளர்ச்சியான 18% விட அதிகமாக உள்ளது. மகாராஷ்டிரா மார்ச் 2020 இன் 5 வது இடத்திலிருந்து மார்ச் 2021 இல் 6 வது இடத்திற்கு நகர்ந்துள்ளது. கர்நாடகாவை தவிர, 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் அனைத்து சிறந்த மாநிலங்களிலும் மார்ச் 2020 உடன் ஒப்பிடும்போது மார்ச் 2021 இல் அதிகரித்துள்ளது.*

*எம்எஃப்ஐ -யில் ஒரு சிறந்த மாநிலத்தில் கவனம் செலுத்தும் எங்கள் செயல்முறையின் தொடர்ச்சியாக, இந்த பதிப்பில் கர்நாடக மாநிலத்திற்கான ஒரு விரிவான மாநில திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம். 31 மார்ச் 2021 நிலவரப்படி, கர்நாடகாவின் நிலுவைத் தொகை ரூ.20,330 கோடியாக உள்ளது, மேலும் அது மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை ஆண்டுக்கு ஆண்டு 16% வளர்ச்சியைக் கண்டது. கர்நாடக மாநிலத்தில், தொகுதி அடிப்படையில் கடன் பெறுவது JFM '20 ல் இருந்து JFM '21ல் ஆண்டுக்கு ஆண்டு 12% வளர்ச்சியைக் கண்டது. ஒட்டுமொத்தமாக கர்நாடக மாநிலத்திற்கான 90+ னாட்கள் தவணை தவறுதல்கள் மார்ச் 2021 இல் 2.41% லிருந்து மார்ச் 2021 இல் 1.73% ஆகக் குறைந்துள்ளது.*

*கோவிட் நெருக்கடி மற்றும், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கின் பல்வேறு மண்டலங்களில் அதன் தாக்கம் இந்தப் பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மொத்த விநியோகிக்கப்பட்ட தொகையில் அதிகபட்ச பங்களிப்பு கிழக்கு மண்டலத்திலிருந்து 45% ஆகும். அனைத்து மண்டலங்களிலும் மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை வழங்கப்பட்ட கடன்களில், வங்கிகளின் சந்தைப் பங்கு அதிகரித்துள்ளது. தென் மண்டலம் JFM '20 முதல் JFM' 21 வரை ஆண்டுக்கு ஆண்டு சராசரி கடன் அளவில் (ATS) 13% அதிக வளர்ச்சியைக் கண்டது.*

# சுருக்கங்கள் மற்றும் சொற்களஞ்சியம்

- ATS (Average Ticket Size) = Disbursed Amount/Number ofLoans

  (சராசரி கடனின் அளவு) = விநியோகிகப்பட்ட தொகை / கடன்களின் எண்ணிக்கை
- DPD = Days PastDue திருப்பிசெலுத்த வேண்டிய காலம் கடந்த நாட்கள்
- Live POS or Borrowers or Active loans = 0 to 179 DPD + New Accounts + Current Accounts நேரடி நிலுவையில் உள்ள கடன்கள் (அ) கடனாளிகள் (அ) செயலில் உள்ள கடன்கள் = 0 லிருந்து 179 DPD + புதிய கணக்குகள் + நடப்புக் கணக்குகள்
- MFI = Microfinance Institution - குறுந்தொழில் நிதி நிறுவனம்
- POS = Portfolio Outstanding -நிலுவையில் உள்ள கடன்களின் போர்ட்ஃபோலியோ
- UT = Union Territory யூனியன் பிரதேசம்

- AspirationalDistricts(AD)–லட்சிய மாவட்டங்கள்

  சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம் மற்றும் நீர் வளங்கள், நிதி சேர்க்கை, திறன் வளர்ச்சி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு போன்ற கூட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில், மனித மேம்பாட்டு குறியீட்டை மேம்படுத்துவதற்காக ஜனவரி 2018 இல் NITI ஆயோக், இந்திய அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்கள் (தற்போதைய எண்ணிக்கை 117).

- 1-179 = 1 to 179 DPD/Live POS
- 1-29 = 1 to 29 DPD/Live POS
- 30-59=30to59DPD/LivePOS
- 60-89=60to89DPD/LivePOS
- 90-179 = 90 to 179 DPD/Live POS
- 30+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 30-179 DPD/Live POS
- 90+ நாட்கள் தவணை தவறுதல் (Delinquency) = 90-179 DPD/Live POS

- JFM' 20 = ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரை
- AMJ' 20 = ஏப்ரல் 2020 முதல் ஜூன் 2020 வரை
- JAS' 20 = ஜூலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை
- OND' 20 = அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 வரை
- JFM' 21 = ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை

EQUIFAX

sidbi

# குறுநிதி தொழில்துறை கண்ணோட்டம்




அறிவினால் உலகை ஆற்றல்மிக்கதாக்குகிறோம்

EQUIFAX Powering the World with knowledge ™

# குறுநிதி தொழில்துறையின் சாராம்சம்

*31 மார்ச் 2021 நிலவரப்படி*





| *சாராம்சம் - 31 மார்ச் 2021 நிலவரப்படி* | வங்கிகள் | சிறுநிதி வங்கிகள் | என்.பி.எஃப்.சி எம்.எஃப்.ஐ | என்.பி.எஃப்.சி | லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | மொத்த தொழில்துறை |
|---|---|---|---|---|---|---|
| தனித்துவ நேரடி கடன்பெற்றவர்கள் ('000) | 27,359 | 13,531 | 24,700 | 7,297 | 846 | 73,733 |
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 41,529 | 16,779 | 36,368 | 7,866 | 1,108 | 103,650 |
| இலாகா (போர்ட்ஃபோலியோ) (ரூ. கோடியில்) | 109,867 | 38,903 | 79,420 | 18,992 | 2,095 | 249,277 |
| வழங்கப்பட்ட தொகை ரூ. கோடியில்) - JFM' 21 | 48,665 | 11,603 | 27,395 | 4,671 | 766 | 93,100 |
| சராசரி டிக்கெட் அளவு (ரூ) - JFM' 21 | 43,417 | 36,993 | 35,223 | 41,256 | 32,037 | 39,627 |
| 30+ Delinquency (POS) | 10.63% | 8.06% | 7.15% | 10.56% | 1.72% | 9.04% |
| 90+ Delinquency (POS) | 4.81% | 3.51% | 3.33% | 5.06% | 0.95% | 4.12% |

- *மார்ச் 2021 இல் MFI தொழில்துறையின் போர்ட்ஃபோலியோ நிலுவைத் தொகை ரூ.249,277 கோடியாக இருந்தது.*
- *வங்கிகள் மற்றும் NBFC-MFIகளின் பங்களிப்பு POS இன் 75% க்கும் அதிகமானது.*
- *JFM '21 இன் போது வழங்கப்பட்ட தொகை ரூ. 93,100 கோடி இல் , வங்கிகளின் பங்கு 52% மற்றும் NBFC-MFI களின் பங்கு 29%.*
- *NBFC-MFI கள், சிறு நிதி வங்கிகள் (SFB) மற்றும் லாப நோக்கு இல்லாத MFI களின் 30+ மற்றும் 90+ நாட்கள் தவறுதல்கள் தொழில்துறையின் தவறுதல்களை விடக் குறைவு*

*குறிப்பு: **MFI** பிரிவில் **6** கோடி தனித்துவமான நேரடி கடன் வாங்குபவர்கள் உள்ளனர். வாடிக்கையாளர்களுக்கு **SFB** கள், வங்கிகள், **NBFC-MFI** கள், **NBFC** களுடன் பல உறவுகளைக் கொண்டிருப்பதால் தனித்துவமான வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளது.*

# குறுநிதி தொழில்துறை- கண்ணோட்டம்

**கடன் வழங்குபவர் வகை மூலம் சந்தை பங்கு போக்குகள்**




| விவரங்கள் | மார்ச் ' 20 | ஜூன் '20 | செப்' 20 | டிச' 20 | மார்ச்' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 81,001 | 91,920 | 93,409 | 96,683 | 109,867 |
| சிறுநிதி வங்கிகள் | 38,986 | 39,225 | 42,682 | 38,109 | 38,903 |
| வங்கிசாரா நிதி நிறுவனங்கள்-குறுநிதி | 72,110 | 71,342 | 70,142 | 73,166 | 79,420 |
| வங்கிசாரா நிதி நிறுவனங்கள் | 18,073 | 19,875 | 19,838 | 18,988 | 18,992 |
| லாப நோக்கு இல்லாத குறுநிதி நிறுவனங்கள் | 1,679 | 1,842 | 1,772 | 1,872 | 2,095 |
| மொத்த தொழில் துறை | 211,849 | 224,204 | 227,843 | 228,818 | 249,277 |
| காலாண்டுக்கு காலாண்டு வளர்ச்சி விகிதம் % | - | 6% | 2% | 0% | 9% |


- குறுந்தொழில் நிதித்துறை கோவிட்-க்கு முந்தைய நிலைக்குத் திரும்புகிறது. தொழில்துறை, டிசம்பர் 2020 முதல் மார்ச் 2021 வரை காலாண்டுக்கு காலாண்டு 9% வளர்ச்சியையும், மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை ஆண்டுக்கு ஆண்டு 18% வளர்ச்சியையும் கண்டது.
- கடன் வழங்கும் பிரிவுகளில், வங்கிகள் சந்தைப் பங்கின் தொடர்ச்சியான அதிகரிப்புடன்,ஆண்டுக்கு ஆண்டு 36% அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- NBFC-MFI கள் மற்றும் SFB களின் சந்தை பங்கு மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை சுமார் 2% குறைந்துள்ளது.

# விநியோக போக்குகள்



# நிறுவன வாரியாக கடன் வழங்கலின் போக்குகள்

**கடன் வழங்குநரின் வகையின்படி சந்தை பங்கு போக்குகள்**





வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)

| கடன் வழங்குபவரின் வகை | JFM' 20 | AMJ' 20 | JAS' 20 | OND' 20 | JFM' 21 |
|---|---|---|---|---|---|
| வங்கிகள் | 83 | 14 | 47 | 102 | 112 |
| சிறுநிதி வங்கிகள் | 31 | 5 | 12 | 20 | 31 |
| வங்கிசாரா நிதி நிறுவனங்கள்-குறுநிதி | 73 | 2 | 33 | 65 | 78 |
| வங்கிசாரா நிதி நிறுவனங்கள் | 11 | 1 | 5 | 8 | 11 |
| லாப நோக்கு இல்லாத குறுநிதி நிறுவனங்கள் | 3 | 1 | 2 | 2 | 3 |
| மொத்த தொழில் துறை | 201 | 23 | 99 | 197 | 235 |

- *JFM '21 இன் போது வழங்கப்பட்ட தொகை ரூ.93,100 கோடியாக இருந்தது. JFM' 20 ல் இருந்து JFM '21 வரை 26% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியில், வங்கிகள் அனைத்து காலாண்டுகளிலும் அதிக பங்களிப்பை வழங்கியுள்ளன.*
- *JFM '20 இலிருந்து JFM' 21 வரை கடன் பெறுதல் 17% அதிகரித்துள்ளது.*
- *வங்கிகளின் கடன் தொகுதி அடிப்படையில் கடன் வழங்குவது JFM '20 இலிருந்து JFM' 21 வரை 35% அதிகரித்துள்ளது.*

# தொழில்துறையின் சராசரி கடன் அளவு போக்குகள்




வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (லட்சத்தில்)


| கடன் அளவு | JFM' 20 | AMJ' 20 | JAS' 20 | OND' 20 | JFM' 21 | ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி விகிதம் % |
|---|---|---|---|---|---|---|
| 0K-10 ஆயிரம் | 9 | 2 | 4 | 34 | 19 | 111% |
| 10 ஆயிரம் -20 ஆயிரம் | 12 | 10 | 16 | 20 | 19 | 58% |
| 20 ஆயிரம் -30 ஆயிரம் | 46 | 2 | 18 | 33 | 39 | -15% |
| 30 ஆயிரம் -40 ஆயிரம் | 63 | 3 | 24 | 44 | 59 | -6% |
| 40 ஆயிரம் -50 ஆயிரம் | 33 | 2 | 18 | 29 | 38 | 15% |
| 50 ஆயிரம் -60 ஆயிரம் | 19 | 2 | 10 | 18 | 28 | 47% |
| 60 ஆயிரத்திற்கு மேல் | 19 | 2 | 9 | 19 | 33 | 74% |
| மொத்தம் | 201 | 23 | 99 | 197 | 235 | 17% |
| காலாண்டுக்கு காலாண்டு (Q-o-Q)கடன் வழங்கலின் வளர்ச்சி விகிதம்% | - | -89% | 330% | 99% | 19% | - |
| அனைத்திந்திய ATS (ரூ) | 36,723 | 28,577 | 35,519 | 33,190 | 39,627 | - |
| Q-o-Q சராசரி கடன் அளவின் வளர்ச்சி விகிதம் % | - | -22% | 24% | -7% | 19% | - |

- *98 இலட்சம் கடன்கள் JFM '21 இல் 20 ஆயிரம் முதல் 40 ஆயிரம் கடன் அளவு பிரிவில் வழங்கப்பட்டது - இது மொத்த கடன்களில் 42% ஆகும்.*
- *0-10ஆயிரம் கடன் அளவு வகை ஆண்டுக்கு ஆண்டு 111% அதிக வளர்ச்சியைக் கண்டது.*
- *கடன் வழங்கல் மற்றும் அகில இந்திய சராசரி கடன் அளவு ஆகியவை JFM '20 முதல் JFM '21 வரை 19% அதிகரித்துள்ளது.*

# தொழில்துறை இடர் தோற்றவிவரம்



# கடன் திருப்பிசெலுத்த தவறுதலின் போக்குகள்




| அறிக்கையின் காலாண்டு | 1-29 நாட்கள் தவறியது | 30-59 நாட்கள் தவறியது | 60-89 நாட்கள் தவறியது | 90-179 நாட்கள் தவறியது | திருப்பிசெலுத்த வேண்டிய காலம் தவறிய நாட்கள் 1-179 நாட்கள் தவறியது |
|---|---|---|---|---|---|
| மார்ச்' 20 | 2.06% | 0.50% | 0.42% | 0.86% | 3.84% |
| ஜூன்' 20 | 1.30% | 1.03% | 0.43% | 0.43% | 3.20% |
| செப்' 20 | 15.35% | 3.47% | 0.39% | 0.63% | 19.83% |
| டிச' 20 | 7.50% | 4.73% | 3.49% | 4.96% | 20.68% |
| மார்ச்' 21 | 4.55% | 2.90% | 2.01% | 4.12% | 13.59% |

- *1-179 நாட்கள் கடந்த தவணை டிசம்பர் 2020 இல் 20.68% ல் இருந்து மார்ச் 2021 13.59% ஆக குறைந்துள்ளது*
- *டிசம்பர் 2020 உடன் ஒப்பிடும்போது, 1 - 29 நாட்கள் கடந்த கடன்தொகை 3% குறைந்துள்ளது*
- *கடந்த மார்ச் 2021இல், 60-89 நாட்கள் தவறுதல் உள்ள தொகுதி மிகக் குறைந்த தவறுதல்களை கண்டது*

**Note:** Delinquencies calculated basis POS.

EQUIFAX

sidbi

# புவியியல் வெளிப்பாடு



EQUIFAX

அறிவினால் உலகை ஆற்றல்மிக்கதாக்குகிறோம்

Powering the World with knowledge ™

# முதல் 10 மாநிலங்களின் போர்ட்ஃபோலியோ போக்கு


| முதல் 10 மாநிலங்கள் | மார்ச் ‘ 20 Portfolio Outstanding (ரூ. கோடியில்) | தரவரிசை | மார்ச் ‘ 21 Portfolio Outstanding (ரூ. கோடியில்) | தரவரிசை | ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|
| மேற்கு வங்காளம் | 29,858 | 1 | 37,201 | 1 | 25% |
| தமிழ்நாடு | 27,077 | 2 | 31,248 | 2 | 15% |
| பீகார் | 25,427 | 3 | 28,997 | 3 | 14% |
| கர்னாடகா | 17,594 | 4 | 20,330 | 4 | 16% |
| மஹாராஷ்டிரா | 15,352 | 5 | 17,224 | 6 | 12% |
| உத்திர ப்ரதேசம் | 14,478 | 6 | 18,011 | 5 | 24% |
| ஒடிசா | 12,489 | 7 | 14,178 | 8 | 14% |
| மத்திய ப்ரதேசம் | 12,354 | 8 | 15,006 | 7 | 21% |
| ஆசாம் | 11,025 | 9 | 10,498 | 10 | -5% |
| ராஜஸ்தான் | 8,590 | 10 | 11,085 | 9 | 29% |
| முதல் 10 மாநிலங்கள் | 174,244 | - | 203,778 | - | 17% |
| மற்றவை | 37,605 | - | 45,499 | - | 21% |
| தொழில்துறை | 211,849 | - | 249,277 | - | **18%** |

- மார்ச் 2020 மற்றும் மார்ச் 2021 இல் நிலுவையில் உள்ள கடன்களுக்கான (POS) க்கான 80% க்கும் அதிகமான பங்களிப்பு முதல் 10 மாநிலங்களால் வழங்கப்படுகிறது
- மேற்கு வங்காளம், மிக உயர்ந்த POS உடன் ஆண்டுக்கு ஆண்டு 25% வளர்ச்சிபெற்று முதலிடத்தில் உள்ளது. இது தொழில்துறையின் 18% வளர்ச்சியை விட அதிகம்.
- மகாராஷ்டிரா, மார்ச் 2020 இன் 5 வது இடத்திலிருந்து மார்ச் 2021 இல் 6 வது இடத்திற்கு நகர்ந்துள்ளது

குறிப்பு: முதல் 10 மாநிலங்களின் தேர்வு மார்ச் 2020 இன் POS அடிப்படையில் ஆகும்

Ranks assigned basis POS

# முதல் 10 மாநிலங்களின் 90+ நாட்கள் தவணை தவறுதல்களின் போக்கு




- *மார்ச் 2021 நிலவரப்படி, அசாம், மேற்கு வங்கம் மற்றும் மகாராஷ்டிராவின் 90+ தவணை தவறுதல்கள் தொழில்துறையை விட அதிகமாக உள்ளது*
- *கர்நாடகாவைத் தவிர, அனைத்து சிறந்த மாநிலங்களின் 90+ தவறுதல்கள் மார்ச் 2020 உடன் ஒப்பிடும்போது மார்ச் 2021 இல் அதிகரித்துள்ளது*

*குறிப்பு: முதல் 10 மாநிலங்களின் தேர்வு மார்ச் 2020 இன் POS அடிப்படையில் ஆகும்*

Delinquencies calculated basis POS.

EQUIFAX

sidbi


# விரிவான மாநில தோற்றம்: கர்நாடகா



அறிவினால் உலகை ஆற்றல்மிக்கதாக்குகிறோம்

EQUIFAX Powering the World with knowledge ™

# கர்நாடகா மாநிலம் – ஒரு பார்வை




| 31 மார்ச், 2021 இல் கர்நாடகா | வங்கிகள் | குறுநிதி வங்கிகள் | என்.பி.எஃப்.சி - எம்.எஃப்.ஐ | என்.பி.எஃப்.சி | லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ | மொத்த தொழில்துறை |
|---|---|---|---|---|---|---|
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 2,612 | 1,351 | 3,844 | 868 | 1 | 8,676 |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்) | 5,455 | 3,059 | 9,734 | 2,078 | 4 | 20,330 |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோவின் சந்தை பங்கு | 27% | 15% | 48% | 10% | 0% | - |
| வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) - JFM' 21 | 2,532 | 914 | 3,584 | 524 | 1 | 7,555 |
| சராசரி கடன் அளவு (ரூ.) - JFM' 21 | 33,933 | 37,389 | 38,315 | 41,603 | 44,856 | 36,814 |
| 30+ நாட்கள் தவறியது (POS) | 3.48% | 5.71% | 3.02% | 6.29% | 1.77% | 3.88% |
| 90+ நாட்கள் தவறியது (POS) | 0.87% | 2.71% | 1.72% | 2.62% | 0.49% | 1.73% |

- *31 மார்ச் 2021 நிலவரப்படி கர்நாடகாவின் நிலுவைத் தொகை ரூ.20,330 கோடியாக உள்ளது.*
- *JFM '21 இல், கர்நாடகாவில் வழங்கப்பட்ட ரூ.7,555 கோடி மதிப்புள்ள போர்ட்ஃபோலியோ நிலுவையில், NBFC-MFI க்கள் மிக அதிகமாக 48% சந்தைப் பங்கைக் கொண்டுள்ளன.*
- *வங்கி சாரா நிதி நிறுவனங்கள், என்.பி.எஃப்.சி-எம்.எஃப்.ஐ, குறுநிதி வங்கிகள் மற்றும் லாப நோக்கு இல்லாத எம்.எஃப்.ஐ களின் சராசரி கடன் அளவு (ATS), கர்நாடகத்தின் சராசரி கடன் அளவை விட அதிகம்*
- *வங்கிகள் மற்றும் லாப நோக்கு அற்ற எம்.எஃப்.ஐ களின் 90+ தவறுதல்கள், கர்நாடகாவில் 1% க்கும் குறைவாக உள்ளன*


# கர்நாடகாவின் கடன் வழங்கும் போக்குகள்

வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)

| கடன் அளவு | JFM‘ 20 | AMJ‘ 20 | JAS' 20 | OND' 20 | JFM’ 21 |
|---|---|---|---|---|---|
| 0 -10ஆயிரம் | 253 | 21 | 94 | 232 | 185 |
| 10 ஆயிரம் -20 ஆயிரம் | 231 | 94 | 188 | 159 | 193 |
| 20 ஆயிரம் -30 ஆயிரம் | 375 | 10 | 137 | 267 | 347 |
| 30 ஆயிரம் -40ஆயிரம் | 480 | 16 | 200 | 398 | 496 |
| 40 ஆயிரம் -50 ஆயிரம் | 272 | 9 | 152 | 242 | 326 |
| 50 ஆயிரம் -60 ஆயிரம் | 135 | 6 | 82 | 173 | 226 |
| 60 ஆயிரத்திற்கும் மேல் | 83 | 4 | 98 | 236 | 278 |
| மொத்தம் | 1,829 | 160 | 951 | 1,707 | 2,051 |

- *கர்நாடக மாநிலத்தில் கடன் பெறுதல் JFM '20 முதல் JFM' 21 வரை ஆண்டுக்கு ஆண்டு 12% வளர்ச்சியைக் கண்டது*
- *AMJ ‘20 ஐத் தவிர, அனைத்து காலாண்டுகளிலும் 30ஆயிரம் முதல் 40ஆயிரம் வரை கடன் அளவு பிரிவில் அதிக எண்ணிக்கையிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன .*


# கர்நாடகத்தின் போர்ட்ஃபோலியோ போக்குகள்




- *மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை கர்நாடகத்தின் போர்ட்ஃபோலியோ 16% அதிகரித்துள்ளது.*
- *போர்ட்ஃபோலியோ நிலுவையை பொறுத்தவரையில் அனைத்து காலாண்டுகளிலும் NBFC-MFI கள் மிக உயர்ந்த சந்தை பங்கை பெற்றுள்ளது. அதை தொடர்ந்து, வங்கிகளின் சந்தை பங்கு வளர்ந்து வருகிறது. இது மார்ச் 2020 இன் 20% லிருந்து மார்ச் 2021 இல் 27% ஆக அதிகரித்தது.*

# தவணை தவறுதலின் போக்கு – கர்நாடகா

*90+ நாட்கள் தவறியது*




- *கர்நாடகாவின் ஒட்டுமொத்த 90+ தவறுதல்கள் மார்ச் 2020 உடன் ஒப்பிடும்போது மார்ச் 2021 இல் மேம்பட்டுள்ளது. இது மார்ச் 2020 இல் 2.41% இலிருந்து மார்ச் 2021 இல் 1.73% ஆக குறைந்துள்ளது*
- *வங்கிகளுக்கான 90+ நாட்கள் கடன் தவணை தவறுதல்கள் மார்ச் 2020 இல் 3.14% இலிருந்து மார்ச் 2021 இல் 0.87% ஆகக் குறைந்துள்ளது.*

குறிப்பு : நிலுவையில் உள்ள கடன்களின் அடிப்படையில் தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது .


# லட்சிய மாவட்டங்கள்





அறிவினால் உலகை ஆற்றல்மிக்கதாக்குகிறோம்

Powering the World with knowledge ™

# லட்சிய மாவட்டங்கள் மார்ச் 2021 - ஓர் கண்ணோட்டம்




**லட்சிய மாவட்டங்களின் வளர்ச்சி விவரங்கள்**

| | டிசம்பர் 2017 | மார்ச் 2021 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| வாடிக்கையாளர்களை அடைவதில் தீவிரம் ('000) | 4,155 | 8,544 | 106% |
| வழங்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | 14,374 * | 27,397 ** | 91% |
| செயலில் உள்ள கடன்கள் ('000) | 6,925 | 13,681 | 98% |
| நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ (ரூ.கோடியில்) | 11,175 | 31,856 | 185% |
| 30+ நாட்கள் தவறியது | 1.54% | 7.68% | - |
| 90+ நாட்கள் தவறியது | 0.75% | 3.32% | - |

- *லட்சிய மாவட்டங்களின் 31 மார்ச் 2021 வரை நிலுவையில் உள்ள போர்ட்ஃபோலியோ ரூ. 31,856 கோடி. இதில் வங்கிகளின் பங்கு 43% மற்றும் NBFC-MFI இன் பங்கு 35%.*

*NBFC களின் 30+ மற்றும் 90+ நாட்கள் தவணை தவறுதல்கள் வங்கி சாரா நிதி நிறுவன்ங்களில் மிக அதிகம். அதற்கு அடுத்த்தாக வங்கிகளில் அதிகமாக உள்ளது.*
*டிசம்பர் 2017 முதல் மார்ச் 2021 வரை நிலுவையில் உள்ள கடன்கள் 185% மற்றும் விநியோகத் தொகை 91% வளர்ச்சி கண்டுள்ளது.*

குறிப்பு: **கடன் வினியோகம் -** *ஜனவரி *2017* முதல் டிசம்பர் *2017* / ** ஏப்ரல் *2020* முதல் மார்ச் *2021* வரை நிலுவையில் உள்ள கடன்களின் அடிப்படையில் தவணை தவறுதல்கள் கணக்கிடப்பட்டுள்ளது

# கோவிட் -19 & புவியியல் போக்குகள்



அறிவினால் உலகை ஆற்றல்மிக்கதாக்குகிறோம்
Powering the World with knowledge ™


# மண்டலவாரியாக சந்தை பங்கு

குறுநிதி துறையில் கோவிட் -19 இன் தாக்கத்தை பகுப்பாய்வு செய்ய, கடன் வழங்குநர்கள் மற்றும் வெவ்வேறு மண்டலங்களில் சராசரி கடன் அளவு போக்குகள் மூலம், சந்தைப் பங்கின் அடிப்படையில் விநியோகப் போக்குகள் மண்டலங்கள் முழுவதும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கடன் வழங்குபவர்களின் தரவு சமர்ப்பிப்பின் அடிப்படையில் மண்டலங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. *JFM'20* ஐ *COVID*-க்கு முந்தைய காலம் என்று எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆண்டுக்கு ஆண்டு *(Y-o-Y)* அடிப்படையில் தரவுகள் ஒப்பிடப்பட்டுள்ளது.

**மண்டல வாரியாக சந்தை பங்கு அடிப்படையில் வழங்கப்பட்ட தொகை**


JFM' 20

வழங்கப்பட்ட தொகை ரூ. **73,736** கோடி




JFM' 21

வழங்கப்பட்ட தொகை ரூ. **93,100** கோடி




கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு

- மொத்த விநியோகிக்கப்பட்ட தொகையில், மிக அதிகமாக, சுமார் 45% கிழக்கு மண்டலம் பங்களிக்கிறது. ,
- மண்டல வாரியான சந்தைப் பங்கின் ஒட்டுமொத்த போக்குகள் *JFM'20* ஐப் போன்றே வட மண்டலத்தில் 1% அதிகரிப்பு மற்றும் தென் மண்டலத்தில் 1% சரிவு

**குறிப்பு : கிழக்கு மண்டலம்** – அருணாச்சல ப்ரதேசம், ஆசாம், பீகார் , சத்தீஸ்கர், ஜார்கண்ட், மணிப்பூர், மேகாலயா , மிசோரம், நாகாலாந்து, ஒடிசா. சிக்கிம், திரிபுரா மற்றும் மேற்கு வங்காளம்..

மேற்கு மண்டலம் - தத்ரா & நாகர் ஹவேலி, தாமன் & டையு, கோவா, குஜராத், மத்ய ப்ரதேசம், மஹாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான்.


வடக்கு மண்டலம் – சண்டிகர் , தில்லி, ஹரியானா, ஹிமாசல் ப்ர்தேசம், ஜம்மு & காஷ்மீர், பஞ்சாப், உத்திர ப்ரதேசம் மற்றும் உத்திராகண்ட்..

தெற்கு மண்டலம் - அந்தமான் & நிகோபார் தீவுகள், ஆந்திர ப்ரதேசம், கர்னாடகா, கேரளா, லக்ஷத்வீப், புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா.


# மண்டலம் & கடன் வழங்குநர் வாரியாக சந்தை பங்கு

*மண்டலம் & கடன் வழங்குநர் வாரியாக சந்தை பங்கு அடிப்படையில் வழங்கப்பட்ட தொகை*


**கிழக்கு மண்டலம்**





மேற்கு மண்டலம்




வடக்கு மண்டலம்




தெற்கு மண்டலம்




JFM' 20 JFM' 21

- *வங்கிகளின் சந்தைப் பங்கு மார்ச் 2020 முதல் மார்ச் 2021 வரை அனைத்து மண்டலங்களிலும் அதிகரித்துள்ளது, வட மண்டலத்தில் அதிகபட்சமாக 7% வளர்ச்சி.*
- *வங்கிகளைத் தவிர, NBFC-MFI தென்மண்டலத்தில் மட்டுமே சந்தைப் பங்கில் வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்தது*

# சராசரி கடன் அளவின் போக்குகள்

மண்டல வாரியாக சராசரி கடன் அளவு போக்குகள்




- தெற்கு மண்டலம் *JFM '20* முதல் *JFM' 21* வரை ஆண்டுக்கு ஆண்டு சராசரி கடன் அளவில் *13%* அதிகபட்ச வளர்ச்சியைக் கண்டது.
- மேற்கு மற்றும் வடக்கு மண்டல சராசரி கடன் அளவு *JFM '20* இலிருந்து *JFM' 21* வரை *9%* அதிகரித்துள்ளது.

## இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி பற்றி :

இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, 1990 இல் பாராளுமன்றத்தின் ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI), குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் நிதி, மேம்பாடு மற்றும் ஒத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான முதன்மை நிதி நிறுவனம் ஆகும். பல ஆண்டுகளாக, சிட்பி அதன் பல்வேறு நிதி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் நேர்மறை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல நம்பகமான நிறுவனங்களுடன் கைகோர்த்து, மொத்த MSME ஸ்பெக்ட்ரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விஷன் 2.0 இன் கீழ் SIDBI, ஃபின்டெக் கடன் வழங்கும் பிரிவில் கிரெடிட் டேட்டா நுண்ணறிவுகளுக்கு, மைக்ரோஃபினான்ஸ் பல்ஸ் தவிர, எம்எஸ்எம்இ துறையில் தகவல் சமச்சீரற்ற தன்மைக்கு தீர்வு காண, எம்எஸ்எம்இ பல்ஸ், எம்எஸ்எம்இ மற்றும் கிரிசிடெக்ஸின் ஹெல்த் டிராக்கர், எம்எஸ்இ உணர்வுகள் மற்றும் அபிலாஷைகளை அளவிடுவதற்கு, தொழில்துறை கடன் வழங்குபவர்கள் மற்றும் ஃபின்டெக் பல்ஸ் பற்றிய ஒரு விரிவான அறிக்கை, போன்ற பல்வேறு முயர்ச்சிகளை முன்னெடுத்துள்ளது.

## குறுநிதி வெளியில் சிட்பியின் பங்கு :

குறுநிதி நிறுவன இயக்கத்தை ஆதரிப்பதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய குறுநிதி இயக்கத்தை மேம்படுத்துவதில் SIDBI முன்னோடி பங்கு வகித்துள்ளது. மார்ச் 31, 2021 வரை வங்கியின் குறுநிதி முன்முயற்சிகளின் கீழ் ரூ.20,568 கோடி ஒட்டுமொத்த உதவி வழங்கப்பட்டது. இது சுமார் 4 கோடி நிறுவனங்களுக்குப் பயனளித்தது. MFI களுக்கான கடன் மற்றும் பங்கு ஆதரவு, இந்த நிறுவனங்களுக்கான திறன் மேம்பாட்டு ஆதரவு மற்றும் பெருநிறுவன நிர்வாக கலாச்சாரத்தை உள்ளீர்த்துக்கொள்வது, இணக்க மதிப்பீட்டு கருவிகள் (compliance assessment tools) போன்றவற்றை ஆதரிப்பதன் மூலம் நன்கு பூர்த்தி செய்யப்படுகிறது. குறுநிதி தொழில் துறையை, பலவீனமான தொடக்கத்திலிருந்து ஒரு முழுமையான தொழில் பிரிவுக்கு முன்னேற்றுவதில் உதவியது மட்டுமல்லாது, அதன் இணை MFI களில் 8 பேர், சிறுநிதி வங்கிகளாகவும் (SFBs)/ /யுனிவர்சல் வங்கிகளாகவும் மாற்றியதில் சிட்பி பங்கு வகித்துள்ளது. குறு நிதி வழங்குவதில் (micro lending), சிறு கடன்களை நேரடியாக SIDBI இலிருந்து (கூட்டாண்மை ஏற்பாடுகள் மூலம்), வட்டி விகிதத்தில் சந்தை விகிதங்களை விடக் குறைவாகக் கிடைக்கச் செய்தது ஒரு புதுமையான முயற்சியாகும். இந்த "பிரயாஸ்" என்று பெயரிடப்பட்ட முயற்சியின் கீழ், மிகவும் ஏழ்மையில் உள்ள மைக்ரோ கடன் வாங்குபவர்களுக்கு சிறிய அளவு கடன்களை ரூ. 0.50 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை, கூட்டாண்மை ஏற்பாடு மாதிரியின் கீழ், சந்தை விகிதங்களை விட ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி விகிதங்களுடன் இந்த வங்கி வழங்கி வருகிறது.

## ஈக்விஃபாக்ஸ் பற்றி :

ஈக்விஃபாக்ஸ் என்பது உலகளாவிய தகவல் தீர்வுகள் நிறுவனமாகும். இது நம்பகமான தனிப்பட்ட தரவு (data), புதுமையான பகுப்பாய்வு, தொழில்நுட்பம் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை அளித்து, உலகெங்கிலும் உள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அறிவை நுண்ணறிவுகளாக மாற்றி அதன் மூலம் அதிக தகவலறிந்த வணிக மற்றும் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க உதவும் ஆற்றல் அளிக்கிறது. அட்லாண்டா, ஜீஏ வை தலைமையிடமாக கொண்ட ஈக்விஃபாக்ஸ், வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 24 நாடுகளில் செயல்படுகிறது அல்லது முதலீடு செய்துள்ளது. இது ஸ்டாண்டர்ட் & புவர்ஸ் (S&P) 500® இன்டெக்ஸில் உறுப்பினராக உள்ளது மற்றும் அதன் பொதுவான பங்கு நியூயார்க் பங்குச் சந்தையில் (NYSE) EFX சின்னத்தில் வர்த்தகம் செய்யப்படுகிறது. ஈக்விஃபாக்ஸ் உலகம் முழுவதும் 11,000 ஊழியர்களை பணியில் அமர்த்தி உள்ளது. கடன் துறையில் 120 ஆண்டுகளுக்கும் மேலாக உலகளாவிய பாரம்பரியத்துடன் உள்ள ஈக்விஃபாக்ஸ், 2010 இல் இந்திய சந்தையில் ஒரு இருப்பை நிறுவியது மற்றும் சிஐசியாக(CIC) செயல்பட ரிசர்வ் வங்கியால் உரிமம் பெற்றது. கடந்த 9 ஆண்டுகளில், இந்த கடன் பணியகம், வங்கிகள், NBFC கள், MFI கள் மற்றும் காப்பீட்டாளர்கள் உட்பட 4000+ உறுப்பினர்களாக வளர்ந்துள்ளது. இந்த உறுப்பினர்கள் மில்லியன் கணக்கான இந்திய மக்கள்தொகை மற்றும் அதன் நுகர்வோர்களின் திருப்பிச் செலுத்தும் தகவல்களின் தரவை வழங்குகிறார்கள். 2014 ஆம் ஆண்டில், ஈக்விஃபாக்ஸ் ஒரு பகுப்பாய்வு நிறுவனத்தை வாங்கியதன் மூலம் இந்தியாவில் அதன் தடம் மேலும் வளர்ந்தது. ஈக்விஃபாக்ஸ் அனலிட்டிக்ஸ் பிரைவேட். லிமிடெட் என்பது இந்தியாவில் ஈக்விஃபாக்ஸின் முழுச் சொந்தமான பகுப்பாய்வு நிறுவனமாகும். இது இணையற்ற தனிப்பயனாக்கப்பட்ட பகுப்பாய்வு தீர்வுகளை வழங்கி, வணிகங்களின் செயல்திறன் மற்றும் நுகர்வோரின் வாழ்க்கை இரண்டையும் வளமாக்குகிறது.

**<u>கருத்து மறுப்பு</u>**

இந்த MSME பல்ஸ் அறிக்கையை (அறிக்கை) ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் லிமிடெட் (ஈக்விஃபாக்ஸ்) தயாரிக்கிறது. அறிக்கையை அணுகி பயன்படுத்துவதன் மூலம் பயனர் அத்தகைய பயன்பாடு இந்த கருத்து மறுப்புக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார். இந்த அறிக்கை ஈக்விஃபாக்ஸ் இன் உறுப்பினர்களாக உள்ள குறுநிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட மார்ச் 2021 தரவுகளின் தகவல்களை கணிசமான அடிப்படையாகக் கொண்டது. அறிக்கையை தயாரிப்பதில் ஈக்விஃபாக்ஸ் நியாயமான அக்கறை எடுத்துக் கொண்டாலும், குறுநிதி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தவறான அல்லது குறைவான தகவல்களால் ஏற்படும் துல்லியம், பிழைகள் மற்றும் / அல்லது குறைகளுக்கு ஈக்விஃபாக்ஸ் பொறுப்பேற்காது. மேலும், ஈக்விஃபாக்ஸ் அறிக்கையில் உள்ள தகவல்களின் போதுமான தன்மை அல்லது முழுமையை உறுதிப்படுத்தாது மற்றும்/அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் அதன் பொருந்தக்கூடிய தன்மைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை அல்லது அறிக்கையின் எந்தவொரு அணுகலுக்கும் அல்லது நம்பகத்தன்மைக்கும் ஈக்விஃபாக்ஸ் பொறுப்பல்ல, மேலும் ஈக்விஃபாக்ஸ் அத்தகைய அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படையாக மறுக்கிறது. இந்த அறிக்கை எந்தவொரு விண்ணப்பத்தையும், தயாரிப்பையும் நிராகரிப்பது/மறுப்பது அல்லது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரை அல்ல, அல்லது ஈக்விஃபாக்ஸ் இன் எந்தவொரு பரிந்துரையும் (i) கடன் வழங்கவோ அல்லது கடன் கொடுக்கவோ இல்லை. (ii) சம்பந்தப்பட்ட தனிநபர் / நிறுவனத்துடன் எந்தவொரு நிதி பரிவர்த்தனையிலும் நுழையவோ அல்லது நுழைய கூடாது என்றோ இல்லை. அறிக்கையில் உள்ள தகவல்கள் ஆலோசனையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் இந்த அறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர் அதன் கருத்தில் விவேகமான அனைத்து தேவையான பகுப்பாய்வுகளையும் பயனர் மேற்கொள்ள வேண்டும். அறிக்கையின் பயன்பாடு கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005, கடன் தகவல் நிறுவன விதிமுறைகள், 2006, கடன் தகவல் நிறுவன விதிகள், 2006 ஆகியவற்றின் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. அறிக்கையின் எந்தப் பகுதியும் முன் ஒப்புதல்கள் இன்றி நகலெடுக்கவோ, புழக்கத்தில் விடவோ, வெளியிடப்படவோக்கூடாது.

.

# தொடர்பு விபரங்கள்


**ஈக்விஃபாக்ஸ் க்ரெடிட் இன்ஃபர்மேஷன் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்**

***யூனிட் எண் 931, 3வது தளம், கட்டிட எண் 9,***
***சாலிட்டைர் கார்பொரேட் பார்க்,***
***அந்தேரி காட்கோபார் லிங்க் ரோடு,***
***அந்தேரி (கிழக்கு), மும்பை – 400 093***

*கட்டணமில்லா எண்.: **1800 2093247***
***ecissupport@equifax.com***

***இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி***
***ஸ்வாவலம்பன் பவன்,***
***ப்ளாட் எண் சி-11, 'ஜீ' ப்ளாக்,***
***பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா (கிழக்கு),***
***மும்பை – 400 051***
***மஹாராஷ்டிரா***

*கட்டணமில்லா எண்.: **1800 226753***
***www.sidbi.in/en***



Copyright © 2021, Equifax Inc., Atlanta, Georgia. All rights reserved. Equifax is a registered trademarks of Equifax Inc.